# மீட்பின் அன்னையே போற்றுகின்றோம்

மீட்பின் அன்னையே போற்றுகின்றோம்
மீட்டிடும் இசையினால் வாழ்த்துகின்றோம்
மாந்தர் அனைவரும் மண்ணில் மீட்படைய
மகனின் பாதையில் மாண்புடன் நடத்திடுவாய்
அன்னையே நீ வாழ்க எம் தாயே நீ வாழ்க

**1**
மருதமடுவில் தரிசனம் தந்தே
தமிழரின் தாயானாய் - எம்
கலங்கரை விளக்கானாய்
வேளை நகரில் வேண்டுதல் ஏற்றே வேதனை தீர்க்கின்றாய்
எம்மை அணைத்தே அருள்கின்றாய்
வாழிடம் விட்டோம் வாழ்வினில் துயர் கண்டோம்
நலமுடன் வாழ திருவருள் கேட்டோம் வளமுடன் நீயருள்வாய்

**2**
தாழ்மைக்கு இலக்கணம் நாங்கள் காண்பது
உந்தன் வாழ்க்கையிலே இறை அடிமை என்றதிலே
தாய்மைக்கு விளக்கம் நாங்கள் உணர்வது
அன்பின்; இதயத்திலே உன் கருணையின் வடிவத்திலே
தமிழினம் காப்பாய் தமிழர் எம் குரல் கேட்பாய்
சுதந்திர பூமியில் இதந்தரும் மகிழ்வுடன்
வாழ்ந்திட வரமருள்வாய் பொன் வானில் மேகங்கள் பூத் தூவுதே